




# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

PRGI NO: TNTAM/25/A1018








Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 237 19.2.2026 THURSDAY MAASI : 7 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 237 19.2.2026 வியாழக்கிழமை மாசி : 7 விலை : ரூ.5/–


# “மார்ச் 16ல் மாநிலங்களவை தேர்தல்!”

## மார்ச் 1ல் மதுரையிலும், 6ம் தேதி வேலூரிலும் நடைபெறும் பிரச்சாரக் கூட்டத்தில் பிரதமர் மோடி பங்கேற்பு



சென்னை: பிப்.19-

பிரதமர் மோடி அடுத்த மாதம் இருமுறை தமிழகத்தில் சுற்றுப் பயணம் மேற்கொள்கிறார். அதன்படி மார்ச் 1ம் தேதி மதுரையிலும், 6ம் தேதி வேலூரிலும் பிரச்சாரக் கூட்டத்தில் பங்கேற்கிறார்.

தமிழக சட்டப் பேரவைத் தேர்தலை முன்னிட்டு, தமிழகத்தில் பாஜக தனது கூட்டணிக் கட்டமைப்பை வலுப்படுத்துவதிலும், புதிய கூட்டணிக் கட்சிகளை ஈர்ப்பதிலும் முழு வீச்சில் ஈடுபட்டு வருகிறது.

இந்நிலையில், ஏற்கெனவே கடந்த மாதம் மதுராந்தகத்தில் நடைபெற்ற தேசிய ஜனநாயகக் கூட்டணியின் (என்டிஏ) பொதுக்கூட்டத்தின் மூலம் பிரதமர் மோடி தனது தேர்தல் பிரச்சாரத்தை தொடங்கினார்.

இதைத்தொடர்ந்து, அடுத்த மாதம் இருமுறை தமிழகத்தில் சூறாவளிப் பிரச்சாரம் மேற்கொள்கிறார். மார்ச் 1ம் தேதி மதுரையில் நடைபெறும் பொதுக் கூட்டத்தில் பங்கேற்கிறார். இக்கூட்டத்தில் கூட்டணியின் தற்போதைய தலைவர்களுடன், புதிதாக இணைய உள்ள கட்சித் தலைவர்களும் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது அரசியல் வட்டாரத்தில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. மதுரையைத் தொடர்ந்து, மார்ச் 6ம் தேதி வேலூரில் நடைபெறும் பிரச்சாரக் கூட்டத்தில் பிரதமர் உரையாற்றுகிறார். பிரதமரின் இந்தப் பயணங்களை ஒருங்கிணைக்க, மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் தலைமையில் மாநில அளவிலான சிறப்புக் குழுக்களை கட்சித் தலைமை அமைத்துள்ளது.

இதுகுறித்து பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது: பிரதமர் மோடியின் சுற்றுப்பயண நிகழ்ச்சிகளை பொறுப்பேற்று வழிநடத்த மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் தலைமையில் மாநில அளவில் குழு அமைக்கப்படுகிறது.

அந்த வகையில், மதுரை பயணத்துக்கு பொறுப்பாளர்களாக மாநில பொதுச் செயலாளர்கள் எம்.முருகானந்தம், ராம சீனிவாசன், பொன் வி.பாலகணபதி ஆகியோர் நியமிக்கப்படுகின்றனர்.

இதேபோல், வேலூர் சுற்றுப்பயண நிகழ்ச்சிக்கு பொறுப்பாளர்களாக மாநில துணை தலைவர் கரு.நாகராஜன், மாநில பொதுச் செயலாளர் கார்த்தியாயினி, மாநில செயலாளர் வெங்கடேசன் ஆகியோர் நியமிக்கப்படுகின்றனர். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில், பாதுகாப்பு ஏற்பாடுகள், கூட்டணிக் கட்சிகளுடனான ஆலோசனைகள் மற்றும் தொண்டர்களைத் திரட்டுவது போன்ற பணிகளை இந்தக்குழு தற்போது துரிதப்படுத்தி உள்ளது.

## ‘விடியல் பயணம்’ திட்டத்தில் 881 கோடி முறை பெண்கள் பயணம்: பட்ஜெட்டில் தகவல்



சென்னை, பிப்.19-

மகளிர் உரிமைத் தொகை திட்டம் மூலம் 1.31 கோடி பெண்களுக்கு மாதம் ரூ.1.000 வழங்கப்பட்டு வருகிறது. இதன் பலனை உணர்ந்து மற்ற மாநிலங்களும் இத்திட்டத்தை பின்பற்றத் தொடங்கியுள்ளன. சமீபத்தில் கோடைகாலச் சிறப்புத் தொகையுடன் சேர்த்து ரூ.5000 வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டதை பெண்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாடினர். ‘விடியல் பயணம்’ திட்டத்தின் மூலம் இதுவரை 881 கோடி முறை பேருந்துகளில் பெண்கள் கட்டணமின்றி பயணித்துள்ளனர். இதனால் மாதம் ஒன்றுக்கு சராசரியாக ரூ.888 வரை பெண்களால் சேமிக்க முடிகிறது.


இத்தகைய பல்வேறு முயற்சிகள் காரணமாக தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண்களில் 41 சதவீதம் பேர் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் என்ற பெருமையை நாம் அடைந்துள்ளோம். இதுதவிர பெண்கள் பெயரில் சொத்து வாங்குவதை ஊக்குவிக்கும் வகையில், கடந்தாண்டு ஏப்ரல் முதல் சொத்து பதிவுக் கட்டணம் மகளிருக்கு 1 சதவீதம் குறைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் 3.71 லட்சம் பேர் பயனடைந்துள்ளனர். திருநங்கைகள் சுயமாகத் தொழில் செய்வதை ஊக்குவிக்க இந்த அரசு மானியம் வழங்குகிறது. இவ்வாறு பட்ஜெட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3 2 விளைபொருட்களுக்கு புவிசார் குறியீடு பெற அரசு நடவடிக்கை

தமிழகத்தின் தனித்துவமான விளைபொருட்களுக்கு புவிசார் குறியீடு பெறும் வகையில், 9 விளைபொருட்களுக்கு புவிசார் குறியீடு பெறப்பட்டுள்ளது. மீதமுள்ள 32 விளைபொருட்களுக்கு புவிசார் குறியீடு பெற தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வேளாண் இடைக்கால பட்ஜெட்டில் தெரிவிக்கப்பட்டது.

இதுகுறித்து பட்ஜெட் உரையில் கூறப்பட்டுள்ளதாவது: கடந்த 5 ஆண்டுகளில் தனித்துவமான விளைபொருட்களுக்கு புவிசார் குறியீடு பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, இதுவரை 41 விளைபொருட்களுக்கு விண்ணப்பிக்கப்பட்டன. இதில், சோழவந்தான் வெற்றிலை, பண்ருட்டி பலாப்பழம், பண்ருட்டி முந்திரி, விருதுநகர் சம்பா வத்தல், ராமநாதபுரம் சித்திரைக்கார் அரிசி, புளியங்குடி எலுமிச்சை, செட்டிக்குளம் சின்ன வெங்காயம், தூயமல்லி அரிசி, கவுந்தப்பாடி நாட்டுச் சர்க்கரை ஆகிய 9 விளைபொருட்களுக்கு புவிசார் குறியீடு பெறப்பட்டுள்ளது. மீதமுள்ள 32 விளைபொருட்களுக்கு புவிசார் குறியீடு பெற தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழகத்தில் காலியாகும் 6 இடங்கள்!



சென்னை, பிப்.19-

தமிழகத்தில் காலியாகும் 6 மாநிலங்களவை எம்.பி. உள்பட 37 எம்.பி. பதவிகளுக்கு மார்ச் 16ல் தேர்தல் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள அறிவிப்பில்,10 மாநிலங்களில் 37 மாநிலங்களவை எம்.பி. பதவிகளுக்கு வரும் மார்ச் 16ம் தேதி தேர்தல் நடைபெறும். பிப்.26ம் தேதியன்று இதற்கான அறிவிக்கை வெளியாகும். வேட்புமனுக்கள் தாக்கல் அன்றைய தினமே தொடங்கும். மார்ச் 5, வேட்புமனு தாக்கல் செய்ய கடைசி நாள். மார்ச் 9ல் வேட்புமனுக்கள் வாபஸ் பெற கடைசி நாள். வாக்கு எண்ணிக்கையானது வாக்குப் பதிவு நாளிலேயே நடைபெறும், என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏப்ரல் 26ம் தேதியுடன் 37 மாநிலங்களவை எம்.பிக்களின் பதவிக் காலம் முடிவடையும் நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

தமிழகத்தில் 6 எம்.பிக்கள் பதவி.. தமிழகத்தில் திமுகவின் திருச்சி சிவா, என்.ஆர்.இளங்கோ, பி.செல்வராசு, கனிமொழி என்விஎன் சோமு, அதிமுகவின் தம்பிதுரை, அதிமுக கூட்டணியில் உள்ள தமாகவின் ஜிகே வாசன் உள்ளிட்டோரின் பதவிக் காலம் முடிவடைகிறது. இதனால், திமுக 4 எம்.பிக்கள், அதிமுக 2 எம்.பிக்களை நிறுத்த வேண்டும்.

தமிழகத்தில் விரைவில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் காலியாக உள்ள 6 மாநிலங்களவை எம்.பி. பதவிகளுக்கு தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது.

சட்டப்பேரவைத் தேர்தலுக்கான கூட்டணியே இழுபறியாக இருக்கும் நிலையில் மார்ச் 16 மாநிலங்களவை எம்.பிக்கள் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளதால் இது திமுக, அதிமுகவுக்கு சீட் ஒதுக்குவதில் நெருக்கடியை ஏற்படுத்தக்கூடும் என்று கணிக்கப்படுகிறது.

## ராதாபுரம் தொகுதி யாருக்கு?

### அதிமுக பாஜக இடையே வலுக்கும் போட்டி!

### சரத்குமாரா? ஆதரவாளரா? ராதாபுரம் தொகுதியில் பாஜகவின் ‘மாஸ்டர் பிளான்’ என்ன?



திருநெல்வேலி: பிப்.19-

தமிழக சட்டமன்றத் தேர்தல் நெருங்கி வரும் வேளையில், தென் மாவட்டத்தின் முக்கியத் தொகுதிகளில் ஒன்றான ராதாபுரத்தைக் கைப்பற்ற அதிமுக மற்றும் பாஜக ஆகிய இரு கட்சிகளுமே மும்முரம் காட்டி வருகின்றன. இதனால் இத்தொகுதியில் கூட்டணிக்குள்ளேயே ஒரு ‘நட்பு ரீதியான’ மோதல் உருவாகியுள்ளது.

**அதிமுகவின் தீவிர முனைப்பு:**

ராதாபுரம் தொகுதியில் கடந்த காலங்களில் அதிமுக வலுவான வாக்கு வங்கியைப் பெற்றுள்ளது. இதன் காரணமாக, இம்முறை அதிமுக சார்பில் போட்டியிடப் பல முக்கிய புள்ளிகள் விருப்ப மனு அளித்துள்ளனர். மைக்கேல் ராயப்பன், சௌந்தர்ராஜன், சீனிவாசன், பலதுரை, ஜான்சி ராணி போன்றோர் தலைமையகத்தில் மனு அளித்ததோடு மட்டுமல்லாமல், தற்போதே களத்தில் இறங்கி மக்கள் பணிகளைத் தொடங்கிவிட்டனர்.

**பாஜகவின் உரிமை கோரல்:**

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில், தற்போதைய தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் ராதாபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் அதிக வாக்குகளைப் பெற்றார். இந்த வெற்றியைச் சுட்டிக்காட்டி, இத்தொகுதியைத் தங்களுக்கு ஒதுக்க வேண்டும் என்று பாஜக மேலிடம் விரும்புவதாகத் தெரிகிறது.

பாஜக தரப்பில், அம்மா செல்வகுமார், பண்ணை பாலகிருஷ்ணன், தமிழ்ச்செல்வன் ஆகியோர் சீட் பெற முயற்சி செய்து வருகின்றனர்.

**சரத்குமார் VS உத்திரலிங்கம்: புது திருப்பம்!**

சமீபத்தில் சமத்துவ மக்கள் கட்சியை பாஜகவுடன் இணைத்த நடிகர் சரத்குமார், தனது ஆதரவாளரான ராதாபுரம் பகுதியைச் சேர்ந்த உத்திரலிங்கத்திற்கு இத்தொகுதியை ஒதுக்கிக் கொடுக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருப்பதாகச் செய்திகள் உலாவுகின்றன.

**அரசியல் வட்டாரத் தகவல்:**

பாஜக மேலிடம் சரத்குமாரையே நேரடியாகக் களமிறங்கச் சொன்னதாகவும், அதற்கு அவர், "உத்திரலிங்கத்திற்கு வாய்ப்பு கொடுங்கள், நான் அவருக்காகத் தேர்தல் வேலைகளைச் செய்து வெற்றியை உறுதி செய்கிறேன்" எனக் கூறியதாகவும் ஒரு தகவல் தீயாய்ப் பரவி வருகிறது.

தொகுதி பங்கீட்டில் ராதாபுரம் யாருக்குச் செல்லும்? ஒருவேளை பாஜகவிற்கு ஒதுக்கப்பட்டால் வேட்பாளர் சரத்குமாரா அல்லது உத்திரலிங்கமா? என்பது வரும் நாட்களில் அரசியல் களத்தில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

## ரூ.20 கோடியில் 47 ஊழியர்களுக்கு கார் பரிசு: 30ம் ஆண்டு விழாவில் ஹைலைட் குழுமம் தாராளம்



கோழிக்கோடு: பிப்.19-

கேரள மாநிலம் கோழிக்கோடில் கடந்த 1996ம் ஆண்டு ஹைலைட் குழுமம் தொடங்கப்பட்டது. இக்குழுமம் கேரளாவின் முதல் ஒழுங்கமைக்கப்பட்ட சில்லறை வணிக மையமான ‘ஃபோகஸ் மால்’ முதல், கோழிக்கோடு மற்றும் திருச்சூரில் உள்ள பிரம்மாண்டமான ‘ஹைலைட் மால்கள்’ வரை பல திட்டங்களை கட்டி முடித்துள்ளது.

இந்நிலையில், தனது 30வது ஆண்டு விழாவைக் கொண்டாடும் விதமாக, 47 ஊழியர்களின் பணியைப் பாராட்டி ரூ.20 கோடி மதிப்பிலான கார்களைப் பரிசாக வழங்கியுள்ளது. இதில் ரேஞ்ச் ரோவர், ஆடி க்யூ8 மற்றும் லேண்ட் ரோவர் டிஃபென்டர் போன்ற சொகுசு கார்களுடன், டாடா ஹாரியர், கியா செல்டோஸ், ஹூண்டாய் கிரெட்டா மற்றும் ஸ்கோடா கைலாக் உள்ளிட்ட மாடல்களும் அடங்கும்.

தங்கள் ஊழியர்களுக்காகச் செய்யப்பட்டுள்ள இந்த மிகப்பெரிய முதலீடு, நிறுவனத்தின் ‘மனிதநேய அணுகுமுறை’ மற்றும் ஊழியர்கள் மீதான அர்ப்பணிப்பைக் காட்டுகிறது என்று அந்நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து ஹைலைட் குழுமத்தின் தலைவர் பி. சுலைமான் கூறும்போது, “கடந்த முப்பது ஆண்டுகளாக, கேரளாவின் உள்கட்டமைப்பைச் சிறந்த முறையில் மேம்படுத்துவதில் நாங்கள் கவனம் செலுத்தி வருகிறோம்” என்றார்.

# ராகுல் காந்திக்கு எதிராக பாஜக தொடர்ந்த அவதூறு வழக்கை தள்ளுபடி செய்தது கர்நாடக ஐகோர்ட்!



பெங்களூரு, பிப்.19- மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்திக்கு எதிராக பாஜக தொடர்ந்த அவதூறு வழக்கை தள்ளுபடி செய்து கர்நாடக உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பாஜக நிர்வாகி கேசவ் பிரசாத் கடந்த 2023ஆம் ஆண்டு காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்திக்கு எதிராக கர்நாடக உயர் நீதிமன்றத்தில் அவதூறு வழக்கு ஒன்றை தொடர்ந்தார்.

அதாவது, 2023ஆம் ஆண்டு கடந்த மே 5ஆம் தேதி கர்நாடக சட்டப்பேரவைத் தேர்தல் நெருங்கிய வேளையில், காங்கிரஸ் சார்பில் அப்போதைய பாஜக அரசை விமர்சித்து, '40 சதவீத ஊழல் சர்க்கார்' என்றும், '2019 ஆம் ஆண்டில் இருந்து 2023 ஆம் ஆண்டு வரையில் பாஜக ரூ.1,50,000 கோடி கொள்ளையடித்துள்ளது' என்றும் செய்தித்தாள்களில் விளம்பரம் வெளியிடப்பட்டிருந்தது.

இதனை ராகுல் காந்தி தனது எக்ஸ் பக்கத்தில் பகிர்ந்து, பாஜகவை விமர்சித்திருந்தார்.

இந்த அடிப்படை ஆதாரமற்ற விளம்பரத்தால் பாஜக ஆட்சிக்கு கடும் அவப்பெயர் ஏற்பட்டது. பாஜகவுக்கு எதிராக அவதூறு பரப்பிய ராகுல் காந்தி மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்" என கோரியிருந்தார்.

இவ்வழக்கில் ராகுல் காந்தி, "எனது விமர்சனம் அப்போதைய பாஜக ஆட்சிக்கு எதிரானது. எந்த தனிநபருக்கும் எதிரானது அல்ல. ஆட்சி நிர்வாகத்தை விமர்சிப்பது அவதூறு வரம்புக்குள் கொண்டுவர முடியாது" என பதிலளித்தார்.

இந்த வழக்கில் இரு தரப்பு வாதங்களும் நிறைவடைந்த நிலையில், கர்நாடக உயர்நீதிமன்ற நீதிபதி சுனில் தத் நேற்று தீர்ப்பை அறிவித்தார்.

அதில், 'இந்திய தண்டனைச் சட்டத்தின் 499 ஆம் பிரிவின்படி தனியார் அமைப்பான பாஜக ஆட்சியாளர்கள், பொது ஊழியர்கள் சார்பாக அவதூறு வழக்கைத் தொடர முடியாது. ஏனெனில் அவதூறு வழக்கு தொடர்வதற்கு அந்த அரசுக்கு மட்டுமே அதிகாரம் உள்ளது.

தனி நபரோ, தனியார் அமைப்போ அந்த அதிகாரத்தை எடுத்துக்கொள்ள முடியாது. எனவே ராகுல் காந்தி மீதான அவதூறு வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது" என உத்தரவிட்டார்.

கர்நாடக உயர் நீதிமன்றத்தின் உத்தரவை தொடர்ந்து பெங்களூருவில் இளைஞர் காங்கிரஸார் பட்டாசு வெடித்து, இனிப்புகளை வழங்கி கொண்டாடினர்.

# மத்திய அரசு நிறுவனம் கண்டுபிடித்த புரோட்டீன் நிறைந்த 'டிசைனர் அரிசி' தனியார் மூலம் விரைவில் சந்தையில் அறிமுகம்



புதுடெல்லி, பிப்.19- மத்திய அரசின் அறிவியல், தொழில் துறை ஆராய்ச்சி கவுன்சில் தேசிய பல்துறை அறிவியல், தொழில்நுட்ப நிறுவனம் (சிஎஸ்ஐஆர் என்ஐஐஎஸ்டி) கேரள தலைநகர் திருவனந்தபுரத்தில் செயல்படுகிறது.

சிஎஸ்ஐஆர் என்ஐஐஎஸ்டி நிறுவனம் சார்பில் அதிக புரோட்டீன், இரும்புச் சத்து, போலிக்அமிலம், வைட்டமின் பி12 உள்ளிட்ட ஊட்டச் சத்துகள் அடங்கிய 'டிசைனர் அரிசி' ரகம் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது. இதில், சாதாரண அரிசியை விட 3 மடங்கு அதிக புரதச் சத்து உள்ளது. இதன்மூலம் பொதுமக்களின் ஊட்டச்சத்து குறைபாட்டை போக்க முடியும். மேலும் டிசைனர் அரிசியில் கிளைசெமிக் இன்டெக்ஸ் (ஜிஐ) அளவு மிக குறைவாக உள்ளது.

அதிக ஜிஐ அளவு உள்ள அரிசி ரகங்களால் ரத்தத்தில் குளுக்கோஸ் அளவு விரைவாக உயரும். புதிய அரிசியில் ஜிஐ அளவு குறைவாக இருப்பதால் சர்க்கரை நோயாளிகளுக்கு வரப்பிரசாதமாக அமையும்.

இதுதொடர்பாக சிஎஸ்ஐஆர்என்ஐஐஎஸ்டி நிறுவனம் வெளியிட்ட அறிக்கையில், "டிசைனர் அரிசி ரகம் தொடர்பான தொழில்நுட்பம், டாடா கன்ஸியூமர் புராடக்ட்ஸ், திருப்பூரை சேர்ந்த எஸ்எஸ் சோல்யூட்ஸ் நிறுவனங்களுக்கு வழங்கப்படவுள்ளது. இந்த ஒப்பந்த பரிமாற்றம் தொடர்பான நிகழ்ச்சி டெல்லியில் பிப். 18ல் நடைபெறுகிறது" என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது.

# ம.பி.யில் காதலி கழுத்தை நெரித்துக் கொன்று ஆவியுடன் பேச முயன்ற காதலன்

இந்தூர், பிப்.19- மத்திய பிரதேச மாநிலம் இந்தூரின் துவாரகபுரி பகுதியிலுள்ள ஒரு குடியிருப்பில் துர்நாற்றம் வீசுவதாக கடந்த ஜன. 13ம் தேதி போலீஸாருக்கு புகார் வந்தது.போலீஸார் வந்து கதவை உடைத்துப் பார்த்தபோது அங்கு 24 வயது மதிக்கத்தக்க பெண்ணின் சடலம் கண்டெடுக்கப்பட்டது. போலீஸார் விசாரணை நடத்தியபோது அந்த வீடு துவாரகபுரியைச் சேர்ந்த எம்பிஏ மாணவர் பியூஷ் தம்னோட்டியா என்பவருக்குச் சொந்தமானது என்பது தெரியவந்தது.

தலைமறைவாக இருந்த பியூஷை போலீஸார் கைது செய்துள்ளனர். இதுகுறித்து இந்தூர் போலீஸ் துணை கமிஷனர் கிருஷ்ணாலால் சாந்தினி கூறியதாவது: பெண்ணின் சடலம் கண்டெடுக்கப்பட்ட வீட்டின் அருகே கிடைத்த சிசிடிவி கேமரா பதிவுகளின் மூலம் அப்பெண்ணை பியூஷ் தனது வீட்டுக்கு அழைத்து வந்தது தெரியவந்தது.

அவரது தொலைபேசி எண்ணை வைத்து அவரை மகாராஷ்டிராவில் கைது செய்தோம். அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி 3 நாள் போலீஸ் காவலில் எடுத்து விசாரித்தோம். கடந்த ஜனவரி மாதம், அந்தப் பெண்ணை வீட்டுக்கு அழைத்து வந்து பியூஷ் பேசிக் கொண்டிருந்தபோது அவர்களுக்குள் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.இதையடுத்து, பியூஷ், பெண்ணின் கழுத்தை கயிற்றால் நெரித்து கொலை செய்துள்ளார். பின்னர் அங்கிருந்து மும்பைக்கு அருகிலுள்ள பன்வலுக்குச் சென்றுள்ளார். அங்கு ஒரு ஓட்டலில் இரவு தங்கி மாந்த்ரீக சடங்குகளை செய்து அந்தப் பெண்ணின் ஆவியைத் திரும்ப அழைத்து பேச முயற்சித்துள்ளார். அந்தப் பெண்ணின் செல்போனையும் உடைத்து அழித்துவிட்டார்.அந்தப் பெண் மற்ற ஆண்களுடன் பேசியதால் எழுந்த சந்தேகம் காரணமாக இந்த கொலை நடந்துள்ளதாகத் தெரிகிறது. கொலை நடந்த தினத்தில் உடலுறவுக்கு அந்தப் பெண்ணை அழைத்துள்ளார்.ஆனால், அவர் மறுக்கவே, உனக்கு திடீர் பரிசு தருகிறேன் என்று பெண்ணின் கண்ணை கட்டிவிட்டு பின்னர் கொலை செய்துள்ளார். பின்னர் உயிரற்ற சடலத்துடன் அவர் உடலுறவு கொண்டதாகத் தெரிகிறது. இவ்வாறு கிருஷ்ணாலால் சாந்தினி தெரிவித்தார்.

# மிகப்பெரிய ஏஐ தரவு மையம் அமைக்கிறது டிசிஎஸ்




மும்பை, பிப்.19- இந்தியாவில் உலகின் மிகப்பெரிய செயற்கை நுண்ணறிவு (ஏஐ) தரவு மையத்தை அமைக்க டிசிஎஸ் நிறுவனம் திட்டமிட்டுள்ளது. டெல்லியில் நடைபெற்ற ஏஐ தாக்க உச்சி மாநாட்டில் இதுகுறித்த அறிவிப்பை டிசிஎஸ் வெளியிட்டது.

வணிக நிறுவனங்கள், அரசு அமைப்புகள் மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்கள் ஏஐ தொழில்நுட்பத்துக்கு பெருமளவில் மாறி வருவதால் வலுவான தரவு உள்கட்டமைப்பு இப்போது மிகவும் அவசியமானதாக மாறி உள்ளது.

தற்போது இந்தியாவின் தரவு மையத் திறன் 1.5 ஜிகா வாட்டாக உள்ளது. இது வரும் 2030க்குள் 10 ஜிகாவாட்டுக்கும் அதிகமாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# அரசியலுக்கு புதிதாக வந்தவர்கள் பற்றி கருத்து சொல்ல விரும்பவில்லை" விஜய் குறித்து வைகோ பதில்



திருவிடைமருதூர், பிப்.19- "அரசியலுக்கு புதிதாக வந்தவர்கள் பற்றி நான் எந்த கருத்தும் சொல்ல விரும்பவில்லை" என மதிமுக பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

திருவிடைமருதூர் வட்டம், திருபுவனத்தில் நடைபெற்ற மதிமுக கட்சி நிகழ்ச்சியில் மதிமுக பொதுச் செயலாளர் வைகோ பங்கேற்று பேசியது: "நடைபெற உள்ள 2026 தேர்தல் நமக்கு அக்னி பரீட்சை. அதனை எதிர்கொண்டுதான் ஆக வேண்டும். தேர்தலில் யார் வெற்றி பெறுவார்கள், யார் தேவையான செலவுகளை செய்ய கூடியவர்கள் என்பதையெல்லாம் பார்த்துதான் வேட்பாளர்களை முடிவு செய்ய முடியும்.

எனவே, ஒவ்வொருவரும் நான்தான் வேட்பாளராக வரவேண்டும் என்ற எண்ணம் இருந்தால் முதலில் அதை தூக்கி எறியுங்கள். நமக்கு எத்தனை தொகுதி வழங்குவார்கள் என்பதும் தெரியாது. ஒரு சில கட்சிகளுக்கு சின்னம் ஒதுக்கப்பட்டுவிட்டது. தேர்தல் ஆணையத்தை யாரோ இயக்குகிறார்கள். மதிமுகவுக்கு அங்கீகாரமே இல்லாத நிலை ஏற்பட்டிருக்கும். அதை முன்கூட்டியே உணர்ந்து தனி சின்னத்தில் நான் போட்டியிடுகிறேன் என முடிவு செய்து நின்றதால்தான் நம் கட்சியை காப்பாற்ற முடிந்தது. அதற்கு முழு காரணம் துரை வைகோ.

தேர்தல் நேரத்தில் நான் யாருக்கெல்லாம் லட்சங்களை அள்ளிக் கொடுத்து உதவினேனோ அவர்கள் தான் மதிமுகவை அழித்து விடலாம் என என்னைப் பற்றி அவதூறு பரப்பினார்கள். மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகத்தை யாராலும் அழிக்க முடியாது. தேர்தல் நிதி வசூலிப்பது என்பது எவ்வளவு சிரமம் என்பது எனக்கு நன்றாக தெரியும். ஒரு காலத்தில் திமுகவுக்கு நான் தேர்தல் நிதி திரட்டும்போது நான் பட்ட சிரமம் எனக்கு நன்றாகவே தெரியும். இப்போது ஏராளமான நிதிகள் இருக்கின்றன. ஆனால் மதிமுகவிடம் அப்படி ஒரு நிலை இல்லை" என்றார்.

மேடையில் பேசிக் கொண்டிருக்கும்போது திடீரென மைக் ஸ்டாண்ட் மூலம் எர்த் அடித்ததால் வைகோ தடுமாறினார். மேடையில் இருந்த அனைவரும் பதறத்தில் எழுந்தனர். சுதாரித்துக் கொண்ட வைகோ, 'மின்சாரம் தாக்க முற்படுகிறது' என தெரிவித்தார்.

பின்னர் பேசிய அவர், "அன்பு சகோதரர் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் இந்தத் தேர்தலுக்குப் பின்னரும் திராவிட மாடல் ஆட்சியை இந்தியாவுக்கே எடுத்துக்காட்டான ஆட்சியாக தொடர்வார். அதில் வெற்றியும் பெறுவார்" என்றார்.

அரசியலுக்கு நடிகர் விஜய் வந்தது குறித்து கேட்டபோது, "அரசியலுக்கு புதிதாக வந்தவர்கள் பற்றி நான் எந்த கருத்தும் சொல்ல விரும்பவில்லை" எனத் தெரிவித்தார்.

# டெல்லி ஏஐ உச்சி மாநாட்டில் இருந்து வெளியேற கல்கோடியாஸ் பல்கலை.க்கு உத்தரவு காரணம் என்ன




புதுடெல்லி, பிப்.19- சீனாவின் யூனிட்ரீ ரோபோடாக் (robodog) ஒன்றை தங்கள் தயாரிப்பு என்று கூறியதற்காக டெல்லி ஏஐ தாக்க உச்சி மாநாட்டில் இருந்து வெளியேற கல்கோடியாஸ் பல்கலைக்கழகத்துக்கு நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் உத்தரவிட்டுள்ளனர்.

செயற்கை நுண்ணறிவு (ஏஐ) தாக்க உச்சி மாநாடு டெல்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் கடந்த 16ம் தேதி முதல் நடைபெற்று வருகிறது. இந்த உச்சி மாநாடு வரும் 20ம் தேதி நிறைவடைகிறது.

உலகளாவிய தெற்கில் நடத்தப்படும் முதல் உலகளாவிய செயற்கை நுண்ணறிவு தாக்க உச்சி மாநாடாக இது அறியப்படுகிறது. இந்த உச்சி மாநாட்டில் 110க்கும் மேற்பட்ட நாடுகள், 30 சர்வதேச நிறுவனங்கள், 45 நாடுகளின் அமைச்சர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

உலகின் கவனத்தை வெகுவாக ஈர்த்துள்ள இந்த உச்சி மாநாட்டில், உத்தரப் பிரதேசத்தின் நொய்டாவில் உள்ள கல்கோடியாஸ் பல்கலைக்கழகம் தனது ஸ்டாலை அமைத்துள்ளது. இந்த ஸ்டாலில், இயந்திர நாய் (ரோபோடாக்) ஒன்றின் செயல் பலரது கவனத்தை ஈர்த்துள்ளது. இந்த ரோபோவை தங்கள் பல்கலைக்கழக மாணவர்கள் உருவாக்கியதாக அந்தப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்தவர்கள் கூறியதாகக் கூறப்படுகிறது. எனினும், இது சீனாவின் யூனிட்ரீ நிறுவனத்தின் ரோபோ என சமூக வலைதளங்களில் செய்தி பரவியது.

தவறான தகவல்களை அளித்ததற்காக ஏஐ தாக்க உச்சி மாநாட்டில் இருந்து வெளியேற கல்கோடியாஸ் பல்கலைக்கழகத்துக்கு நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் உத்தரவிட்டுள்ளனர்.

இதையடுத்து, பல்கலைக்கழகம் சார்பில் பேராசிரியர் நேஹா சிங் செய்தியாளர்களிடம் பேசும்போது, "ஏஐ தாக்க உச்சி மாநாட்டில் இருந்து வெளியேற வேண்டும் என்ற உத்தரவு எதுவும் இதுவரை எங்களுக்கு கிடைக்கவில்லை. கல்கோடியாஸ் நிறுவனம் மிகவும் பொறுப்பான நிறுவனம்.

இந்த இயந்திர நாயை (ரோபோ) நாங்கள் உருவாக்கவில்லை. உருவாக்கியதாகவும் நாங்கள் கூறவில்லை. இது போன்ற தொழில்நுட்பங்களை வடிவமைத்து உற்பத்தி செய்யும் மனங்களைத்தான் நாங்கள் உருவாக்கி வருகிறோம். இதற்காக, நவீன தொழில்நுட்பங்களை அணுக மாணவர்களுக்கு நாங்கள் வசதிகளை ஏற்படுத்தித் தருகிறோம். இதனால், அவர்கள் நடைமுறை அனுபவத்தைப் பெறுகிறார்கள். மேலும், எதிர்காலத்துக்கு தங்களை தயார்படுத்திக் கொள்கிறார்கள்.

எங்கள் பல்கலைக்கழகத்துக்கு எதிராக எதிர்மறையான கருத்துக்களைப் பரப்புவது, தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி புதுமைகளை உருவாக்கவும், கற்றுக்கொள்ளவும், தங்கள் திறன்களை வளர்த்துக்கொள்ளவும் கடினமாக உழைக்கும் மாணவர்களின் மன உறுதியைப் பாதிக்கும்" என தெரிவித்துள்ளார்.

சீனாவின் யூனிட்ரீ என்ற நிறுவனம், இத்தகைய ரோபோக்களை குறைந்த விலையில் அதிக அளவில் உற்பத்தி செய்கிறது. பாஸ்டன் டைனமிக்ஸ் ஸ்பாட் போன்ற பல போட்டியாளர்களைவிட இத்தகைய இயந்திர நாய்கள் மலிவாகவும் எளிதாகவும் கிடைக்கின்றன. தொழில்துறை பணிகளுக்கும், பொழுதுபோக்குப் பயன்பாடுகளுக்கும் இத்தகைய ரோபோக்கள் அதிகம் பயன்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

# ஈரோட்டில் விடுதலை சிறுத்தைகள் கட்சி தேர்தல் பணிகள் தீவிரம்



ஈரோடு, பிப்.19- ஈரோடு கிழக்கு மாவட்ட அலுவலகத்தில், கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் அவர்களின் ஆணைக்கிணங்க, மண்டல செயலாளர் ஜாபர் அலி மற்றும் கிழக்கு மாவட்ட செயலாளர் டாக்டர் எஸ்.எம். சாதிக்கு ஆகியோர் முன்னிலையில் இது குறித்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட மாவட்டப் பொறுப்பாளர்கள் நியமனம் மற்றும் புதிய நிர்வாகிகள் தேர்வுக்கான விண்ணப்பங்கள் பெறுவது குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.

தலைமையின் உத்தரவின்படி, நிர்வாகிகள் தேர்வுக்கான விண்ணப்பங்கள் பெறுதல் மற்றும் தேர்தல் குறித்த ஆலோசனை கூட்டம் வருகின்ற 22.02.2026 (ஞாயிற்றுக்கிழமை) அன்று மண்டல செயலாளர் ஜாபர் அலி மற்றும் மாவட்ட செயலாளர் எஸ்.எம். சாதிக்கு ஆகியோர் தலைமையில் நடைபெற உள்ளது.

# பாகிஸ்தான்: தீவிரவாத தாக்குதல் சம்பவங்களில் 14 வீரர்கள் உட்பட 17 பேர் உயிரிழப்பு

இஸ்லாமாபாத், பிப்.19- பாகிஸ்தானின் கைபர் பக்துன்க்வா மாகாணத்தில் நிகழ்ந்த தீவிரவாத தாக்குதல் சம்பவங்களில் 14 பாதுகாப்புப் படை வீரர்கள் உட்பட 17 பேர் உயிரிழந்தனர்.



பாகிஸ்தானின் கைபர் பக்துன்க்வா மாகாணம், பஜாவுர் மாவட்டத்தில், தீவிரவாதிகள் நேற்று முன்தினம் மாலை வெடிபொருட்கள் நிரப்பப்பட்ட ஒரு வாகனத்தை ஒரு சோதனைச் சாவடிக்கு அருகிலுள்ள ஒரு கல்லூரியின் சுவரில் மோதி தாக்குதல் நடத்தினர். இதில் 11 பாதுகாப்புப் படை வீரர்கள் மற்றும் ஒரு சிறுமி கொல்லப்பட்டதாக ராணுவம் தெரிவித்துள்ளது.இந்த தாக்குதல் அருகில் இருந்த குடியிருப்புகளையும் கடுமையாக சேதப்படுத்தியது. அத்துடன் 7 பேர் காயமடைந்தனர். இதுபோல பன்னு நகரில் உள்ள மிரியன் காவல் நிலையம் அருகே ரிக்சாவில் வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டு வெடித்ததில் பொதுமக்கள் 2 பேர் உயிரிழந்தனர் மற்றும் 17 பேர் காயமடைந்தனர்.மேலும் ஷாங்லா மாவட்டத்தில் தேடுதல் வேட்டையின்போது நடந்த மோதலில் 3 போலீஸார் மற்றும் 3 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்ட தீவிரவாதிகள் சீனர்களை இலக்காகக் கொண்டு நடத்தப்பட்ட தாக்குதல்களில் தொடர்புடையவர்கள் என்று காவல் துறை தெரிவித்துள்ளது.

# உள்ளாட்சி தேர்தலை நடத்தாத முதல்வர் ஸ்டாலின் 'மாநில சுயாட்சி' பற்றி பேசலாமா?" தமிழிசை தாக்கு



சென்னை, பிப்.19- 'ஏராண்டு காலமாக 27 மாவட்டங்களில் ஊரக உள்ளாட்சி தேர்தலை நடத்தாமல் உள்ளாட்சிகளுக்கான உரிமையை பறித்த முதல்வர் ஸ்டாலின் இன்று மாநில சுயாட்சியை பற்றி பேசுகிறார்' என பாஜக மூத்த தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் சாடியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'ஏராண்டு காலமாக 27 மாவட்டங்களில் ஊரக உள்ளாட்சி தேர்தலை நடத்தாமல் உள்ளாட்சிகளுக்கான உரிமையை பறித்து மக்கள் பிரதிநிதித்துவம் இல்லாமல் அதிகாரிகளை வைத்து நிர்வாகம் செய்து கொண்டிருக்கும் முதல்வர் ஸ்டாலின் இன்று மாநில சுயாட்சியை பற்றி பேசுகிறார்.தான் ஆளும் தமிழ்நாட்டில் மாநிலத்துக்கு உள்ளாக உள்ள முறையான அதிகார பகிர்வை, அதாவது உள்ளாட்சிகளுக்கு உரிமை கொடுக்க முடியாதவர், எல்லா மாநிலங்களுக்கும் சமமாக தனது நிர்வாகத்தை எந்த பாரபட்சமும் இல்லாமல் நடத்திக் கொண்டிருக்கும் மத்திய அரசை பார்த்து குறை கூறிக் கொண்டிருக்கிறார்.

தேர்தலில் வளர்ச்சியை சொல்லி வாக்கு கேட்க முடியாத திராவிட முன்னேற்ற கழகம், மாநில சுயாட்சி என்று முதலில் கோரிக்கை வைத்து பின்பு தாங்கள் மத்தியில் ஆட்சியில் வரும்பொழுது அதை எல்லாம் மறந்து, இன்று மறுபடியும் தோல்வி பயம் வரும் பொழுது இதைப் போன்ற கோரிக்கைகளை கையில் எடுக்கிறார்கள். திமுகவின் தோல்வி பயத்தையே இது காண்பிக்கிறது' என்று தமிழிசை குறிப்பிட்டுள்ளார்.

முதல்வர் ஸ்டாலின் பேசியது என்ன?

முன்னதாக, "ஆளுநர்கள் மூலமாக மாநில அரசுகளை செயல்படவிடாமல் தடுப்பது, ஜி.எஸ்.டி, இந்தி திணிப்பு, தொகுதி மறுவரையறை உள்ளிட்ட பல்வேறு வழிகளில் அதிகாரங்களை கபளீகரம் செய்கிறது மத்திய அரசு. அனைத்து மாநிலங்களும் இணைந்து நடத்தும் கூட்டாட்சியாக ஒன்றிய அரசு இருக்க வேண்டும். கூட்டாட்சிக்கு முக்கியத்துவம் தரும் வகையில், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை திருத்த வேண்டும். மத்திய அரசும் மாநில அரசும் போட்டியாளர்கள் அல்ல. இருவரும் பொது அமைப்பின் பங்குதாரர்கள். மாநிலங்கள் வளர்ந்தால்தான் மத்திய அரசு வளரும். மாநில சுயாட்சிக்கான முன்னெடுப்பை நாம்தான் செய்ய வேண்டும். நம்மைவிட்டால் செய்ய யாரும் இல்லை. இது வரலாறு வழங்கி இருக்கும் வாய்ப்பு" என்று சட்டப்பேரவையில் முதல்வர் ஸ்டாலின் பேசியது குறிப்பிடத்தக்கது.



## வரி உயர்வைத் திரும்பப் பெறு; இல்லையேல் சொத்துக்களை ஒப்படைப்போம்!" ஈரோடு பாஜக எஸ்.எம்.செந்தில் ஆவேச உரை

ஈரோடு, பிப்.19-
திமுக அரசின் ஊழல் மற்றும் மக்கள் விரோதப் போக்கைக் கண்டித்து, ஈரோடு தெற்கு மாவட்ட பாஜக சார்பில் காசிபாளையம் பகுதியில் மாபெரும் தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம் நடைபெற்றது.

மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் அறிவுறுத்தலின்படி நடைபெற்ற இக்கூட்டத்தில், மாவட்டத் தலைவர் எஸ்.எம்.செந்தில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். அப்போது அவர் பேசியதாவது: ஈரோடு மாநகராட்சியில் சொத்து வரி பல மடங்கு உயர்த்தப்பட்டுள்ளது. கோவை, திருப்பூர் போன்ற அண்டை நகரங்களை விட ஈரோட்டில் வரி அதிகமாக உள்ளது. ஆனால், சாலை வசதி, தெருவிளக்கு, வடிகால் போன்ற அடிப்படை வசதிகளைச் செய்ய மாநகராட்சி நிர்வாகம் தவறிவிட்டது. வரி வசூலிப்பதில் மட்டுமே குறியாக உள்ளனர். தமிழக அரசின் கடன் சுமை 10 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது. இதனால் தொழில்முனைவோர் அண்டை மாநிலங்களுக்குச் செல்லும் அவலநிலை ஏற்பட்டுள்ளது. இளைஞர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகி உள்ளது.

*போராட்ட எச்சரிக்கை:* மாநகராட்சி தனது வரி உயர்வைத் திரும்பப் பெறாவிட்டால், "சொத்துக்களை மாநகராட்சியிடமே ஒப்படைக்கும்" நூதனப் போராட்டத்தை பாஜக முன்னெடுக்கும் என அவர் எச்சரித்தார். மேலும், வரும் பிப்ரவரி 28ஆம் தேதிக்குள் "இது வரியா? அல்லது வாடகையா?" என்ற தலைப்பில் பட்டிமன்றம் நடத்தப்படும் என்றும் அவர் அறிவித்தார்.

இந்நிகழ்வில் தேசிய ஜனநாயகக் கூட்டணியைச் சேர்ந்த தமிழ் மாநில காங்கிரஸ் மாநில பொதுச் செயலாளர் யுவராஜா, தமிழ் மாநில காங்கிரஸ் ஈரோடு மாவட்ட தலைவர் விஜயகுமார், ஈரோடு மேற்கு அம்மா மக்கள் முன்னேற்ற கழகம் மாவட்ட செயலாளர் வெங்கடேசன், கொல்லம்பாளையம் பகுதி செயலாளர் ராஜேந்திரன், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பகுதி செயலாளர்கள் கோவிந்தராஜன், ஈஸ்வரமூர்த்தி, கணேசமூர்த்தி, மாநகராட்சி எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் பகுதி செயலாளர் தங்கமுத்து, பாட்டாளி மக்கள் கட்சி மாவட்ட செயலாளர் ராஜுᵘ,

மாவட்ட தலைவர் பிரபு, மாநில துணை தலைவர் பரமசிவம் மற்றும் ஏராளமான பாஜக தொண்டர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

## கோவை மக்கள் மீது இவ்வளவு வெறுப்பா?' தயாநிதி மாறன், செந்தில் பாலாஜிக்கு தவெக கண்டனம்



சென்னை, பிப்.19-
"மனதுக்குள் கோவை மக்கள் மீது இவ்வளவு வெறுப்பை வைத்துக் கொண்டு, கோவையில் இருந்து வெற்றியைத் தொடங்க முதல்வர் பேராசைப்படலாமா?" என தவெக கொள்கைப் பரப்பு பொதுச் செயலாளர் அருண் ராஜ் விமர்சித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், "தயாநிதி மாறனும், செந்தில் பாலாஜியும் கோவை மக்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டும். கரூரில் நடந்த பொதுக் கூட்டத்தில் திமுக எம்.பி. தயாநிதி மாறன், கோவை மக்களை இழிவாகச் சித்தரித்துக் கிண்டல் செய்யும் வீடியோ வெளியாகியுள்ளது.

பண்புக்கும், மரியாதைக்கும் பெயர் பெற்ற கோவை மக்களை, 'அடுத்தவர்களைக் கெடுப்பவர்கள்' எனக் கெட்ட எண்ணத்துடன் எம்.பி. தயாநிதி மாறன் பேச, மேடையிலேயே அமர்ந்திருக்கும் முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி சிரித்துக் கொண்டிருக்கிறார். மக்களை மரியாதையாக நடத்தினால் தான், மக்களும் உங்களை மதித்து ஓட்டுப் போடுவார்கள். ஆனால், திமுகவினருக்கு மக்களை மரியாதையாக நடத்தத் தெரியவே தெரியாது என்பதற்குப் பொது வெளியில் பல உதாரணங்கள் உள்ளன.

கோவை மக்கள் மீது திமுகவினருக்கு எந்த அளவுக்குத் தனிப்பட்ட வன்மம் இருக்கிறது என்பதைத் தயாநிதி மாறனின் பேச்சு உறுதிப்படுத்தியிருக்கிறது. ஆகையால், எம்.பி. தயாநிதி மாறனும், செந்தில் பாலாஜியும் கோவை மக்கள் முன்பாகப் பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும். மனதுக்குள் கோவை மக்கள் மீது இவ்வளவு வெறுப்பை வைத்துக் கொண்டு, கோவையில் இருந்து வெற்றியைத் தொடங்க முதல்வர் பேராசைப்படலாமா?

கவலைப்படாதீர்கள் முதல்வரே... இந்த முறை வழக்கம் போல கோவையில் மட்டுமல்ல, தமிழ்நாடு முழுவதும் தோல்வியைச் சந்திப்பீர்கள்!" என்று அவர் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, கரூரில் நேற்று திமுக சார்பில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. அதில் கலந்துகொண்ட எம்.பி தயாநிதி மாறன், 'கோவை மக்கள், அவர்கள் ஊரைக் கெடுக்காமல் பக்கத்து ஊரை கெடுப்பார்கள்' என்று பேசியது சர்ச்சையாக மாறியுள்ளது.

## தமிழக தேர்தல்... பிரதமர் மோடிக்கும், அமித் ஷாவுக்கும் பயம்!" செல்வப்பெருந்தகை கருத்து

சென்னை, பிப்.19-
"பிரதமர் மோடிக்கும், அமித் ஷாவுக்கும் பயம் வந்துவிட்டது. தமிழகத்துக்கு அடிக்கடி சென்று ஏதாவது மாற்றத்தை ஏற்படுத்த முடியுமா என முயற்சிக்கிறார்கள்" என தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் இன்று செய்தியாளர்களிடம் கூறும்போது, "தேர்தல் ஆணையம் யாரால் இயக்கப்படுகிறது என தெரியும். பிரதமர் மோடி என்ன சொல்கிறாரோ அதை தேர்தல் ஆணையம் செய்யும். தேர்தல் ஆணையம் சுதந்திரமாக இயங்குவதற்கு வாய்ப்பில்லை. இதைத்தான் பிஹார், மகாராஷ்டிரா, ஹரியானா, டெல்லி ஆகிய மாநிலங்களில் பார்த்தோம்.

தேர்தல் ஆணையம் திறந்த மனதுடன் செயல்பட வேண்டும். இதைத்தான் நாட்டு மக்களும் எதிர்பார்க்கிறார்கள். இவர்கள் தொடர்ந்து இப்படி இயங்கி வந்தால், நாட்டு மக்களின் நம்பிக்கை போய்விடும்.

காங்கிரஸ் திமுக கூட்டணி பேச்சுவார்த்தை 22ஆம் தேதி நடக்கும் என நம்புகிறோம்.

பிரதமர் மோடிக்கும், அமித் ஷாவுக்கும் பயம் வந்துவிட்டது. தமிழகத்துக்கு அடிக்கடி சென்று ஏதாவது மாற்றத்தை ஏற்படுத்த முடியுமா என முயற்சிக்கிறார்கள். இங்கு 400 முறை வந்தாலும் அவர்களால் தமிழகத்தில் எந்தவித மாற்றத்தையும் ஏற்படுத்த முடியாது.

தமிழகம் ஆர்எஸ்எஸ் பாஜவுக்கான மண் இல்லை. இது சமூக நீதி மண். தமிழக மக்கள் புத்திசாலிகள். பாஜகவுடன் இருக்கும் அதிமுகவும் திரை மறைவில் ஒளிந்துகொண்டு, பாஜகவின் திட்டங்களை நிறைவேற்ற முயற்சிக்கிறார்கள். வாச்சாத்தி, பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை சம்பவம் குறித்து முதலில் எடப்பாடி பழனிசாமி பேசட்டும்" என அவர் தெரிவித்துள்ளார்.

## சேரன் பள்ளி மாணவர்களின் 'ஹாட்ரிக்' சாதனை: மாநில ஹேண்ட்பால் போட்டியில் பதக்க வேட்டை



சின்னாளபட்டி, பிப். 19-
திண்டுக்கல் மாவட்டம், சின்னாளபட்டி சேரன் வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி மாணவர்கள், மாநில அளவிலான ஹேண்ட்பால் (கைப்பந்து) போட்டிகளில் தங்கம் உள்ளிட்ட மூன்று விதமான பதக்கங்களை வென்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளனர்.

பள்ளிக்கல்வித் துறை சார்பில் 5வது குடியரசு தின விழா விளையாட்டுப் போட்டிகள் இராணிப்பேட்டை மாவட்டம், விள்ளாப்பாக்கம் டி.எல்.ஆர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்றது. இதில் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்து ஏராளமான அணிகள் பங்கேற்றன. மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இந்தப் போட்டிகளில் சேரன் பள்ளி மாணவர்கள் தங்கள் அபாரத் திறமையை வெளிப்படுத்தி வெற்றிகளைப் பெற்றுள்ளனர்.தாளாளர் எம். சிவக்குமார் பேசுகையில்: "பொதுவாகப் பள்ளிகள் மாநிலப் போட்டிகளில் ஏதேனும் ஒரு பரிசைப் பெறுவது வழக்கம். ஆனால், ஒரே கல்வி ஆண்டில் மாநில அளவிலான போட்டிகளில் தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலம் என மூன்றையும் வென்று பள்ளிக்கும், திண்டுக்கல் மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்துள்ளனர். மாணவர்களின் இந்த வெற்றிக்குக் கடின உழைப்பும், பயிற்சியாளர்களின் முறையான பயிற்சியுமே காரணம்," எனப் பெருமிதத்துடன் தெரிவித்தார்.இந்த விழாவில் பள்ளி மேலாளர் பா. பாரதிராஜா, அறங்காவலர்கள் ஆல்பிரட் எங், அபிஷேக், ஹேண்ட்பால் பயிற்சியாளர்கள் அசோக்குமார், செந்தில்குமார், ஆரோக்கிய ரஞ்சனி, உதவித் தலைமையாசிரியை வெண்ணிலா மற்றும் ஆசிரியர்கள், அலுவலகப் பணியாளர்கள் கலந்துகொண்டு மாணவர்களை வாழ்த்தினர்.

## திருப்பத்தூர் அருகே சாதிப் பெயரைக் கூறி தாக்குதல் உரிய நடவடிக்கை எடுக்க குடும்பத்தினர் கோரிக்கை



திருப்பத்தூர், பிப்.19-
தோக்கியம் காலனி பகுதியைச் சேர்ந்த அண்ணாமலை என்பவரின் மகனை, அதே பகுதியைச் சேர்ந்த திரிசந்த் என்பவர் தாக்கியதாகக் கூறப்படுகிறது. இது குறித்து விவரம் கேட்பதற்காக அண்ணாமலை, திரிசந்திடம் சென்றுள்ளார். அப்போது திரிசந்த் மற்றும் அவரது நண்பர் அசேன் ஆகிய இருவரும் சேர்ந்து, அண்ணாமலையை மிகவும் இழிவாகப் பேசி, அவரது சாதிப் பெயரைக் குறிப்பிட்டுத் தாக்கியுள்ளனர். இந்தத் தாக்குதலில் அண்ணாமலையின் முன் பற்கள் உடைந்துள்ளன. பலத்த காயமடைந்த அவர், தற்போது அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சை பெற்று வருகிறார். இந்தக் கொடூரத் தாக்குதல் குறித்து உள்ளூர் காவல்துறையில் புகார் அளிக்கப்பட்டும், இதுவரை சம்பந்தப்பட்ட நபர்கள் மீது எந்தவிதமான சட்டப்பூர்வ நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனப் பாதிக்கப்பட்டவரின் குடும்பத்தினர் குற்றம் சாட்டுகின்றனர்.



## தொடர்ந்து சரியும் தங்கம், வெள்ளி விலை இன்றைய நிலவரம் என்ன

சென்னை, பிப்.19-
தங்கம் விலை (பிப்.18) மேலும் குறைந்து ஒரு கிராம் ரூ.14,230க்கு விற்பனையாகிறது. வெள்ளி விலையும் கிராமுக்கு ரூ.5 குறைந்துள்ளது.

சர்வதேச பொருளாதார மற்றும் அரசியல் சூழல், அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு, தங்கத்தின் மீதான முதலீடு அதிகரிப்பு, உலக பங்குச் சந்தை முதலீடுகள் உள்ளிட்டவற்றின் அடிப்படையில், தங்கத்தின் விலை நிர்ணயிக்கப்படுகிறது. உலக அளவில் தங்கத்தை இறக்குமதி செய்யும் நாடுகளில் இந்தியா முன்னணியில் உள்ளது.

இந்தச் சூழலில், கடந்த சில நாட்களாகவே தங்கம் விலை உயர்ந்தும் குறைந்தும் வருகிறது. உலக நாடுகளுக்கு இடையிலான வர்த்தக ரீதியான உறவு இதற்கு முக்கிய காரணம் என துறை சார்ந்த வல்லுநர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், (பிப்.18) காலை சென்னையில் 22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை கிராமுக்கு ரூ.90 குறைந்து, ஒரு கிராம் ரூ.14,230க்கு விற்பனை ஆகிறது. பவுனுக்கு ரூ.720 குறைந்து, ஒரு பவுன் ரூ.1,13,840க்கு விற்பனை ஆகிறது.

அதே போல, 18 காரட் தங்கம் விலையும் கிராமுக்கு ரூ.70 குறைந்து ஒரு கிராம் ரூ.12,180க்கும் பவுனுக்கு ரூ.560 குறைந்து ஒரு பவுன் ரூ.97,440க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

வெள்ளி விலை கிராமுக்கு ரூ.5 குறைந்து, ஒரு கிராம் ரூ.260க்கும், கட்டி வெள்ளி கிலோவுக்கு ரூ.5,000 குறைந்து, ஒரு கிலோ ரூ.2,60,000க்கும் சந்தையில் விற்பனை ஆகிறது.

பிளாட்டினம் விலை கிராமுக்கு ரூ.46 குறைந்து ஒரு கிராம் ரூ.5,942க்கு விற்பனையாகிறது.



## மாணவர்களின் செல்போனில் இனி 'ஆன்டி டிரக்' அலர்ட்! திருப்பூர் எஸ்பியின் புதிய அதிரடி திட்டம் களத்தில் இறங்கிய போலீசார்

திருப்பூர், பிப்.19-
திருப்பூர் மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் யாதவ் கிரீஸ் அசோக் அவர்களின் உத்தரவின்படி, மாவட்டம் முழுவதும் உள்ள பள்ளி மற்றும் கல்லூரிகளில் போதைப்பொருள் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மிகப்பிரம்மாண்டமாக நடைபெற்றது.*உட்கோட்ட வாரியாக விழிப்புணர்வு:*
அவிநாசி, பல்லடம், உடுமலை, தாராபுரம் மற்றும் காங்கேயம் ஆகிய உட்கோட்டங்களில் உள்ள துணைக் காவல் கண்காணிப்பாளர்கள் (DSP) நேரடி மேற்பார்வையில் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அந்தந்தப் பகுதி காவல் ஆய்வாளர்கள் மற்றும் உதவி ஆய்வாளர்கள் கல்வி நிறுவனங்களுக்கு நேரில் சென்று, போதைப்பொருள் பயன்படுத்துவதால் ஏற்படும் உடல்நலக் கேடுகள் மற்றும் சட்ட ரீதியான விளைவுகள் குறித்து விரிவாக விளக்கினர்.*புதிய முயற்சி: 'Anti Drug Committee' வாட்ஸ்அப் குழுக்கள்*
இந்த விழிப்புணர்வு நடவடிக்கையின் ஒரு பகுதியாக, ஒவ்வொரு பள்ளிமற்றும் கல்லூரியிலும் 'Anti Drug Committee' என்ற பெயரில் புதிய வாட்ஸ்அப் குழுக்கள் தொடங்கப்பட்டுள்ளன.

## திமுக முன்னோடிகளுக்கு சிறப்பு எம்பி தமிழச்சி தங்கப்பாண்டியன் மற்றும் ஐ.பி.செந்தில்குமார் நேரில் சந்திப்பு



திண்டுக்கல், பிப்.19-
திண்டுக்கல் மாவட்டம், சின்னாளபட்டியில் பொதுக்கூட்டம் மற்றும் தொழில் முனைவோர் கலந்துரையாடலில் பங்கேற்க வந்த தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினரும், கழக கல்வி அணி செயலாளருமான தமிழச்சி தங்கப்பாண்டியன் தான் செல்லும் ஊர்களில் கட்சியின் மூத்த நிர்வாகிகள் மற்றும் கட்சிக்காக உழைத்த தியாகிகளை கவுரவிப்பது வழக்கம்.

பேரூர் கழக திமுகவில் செயலாளர், அவைத்தலைவர், கூட்டுறவு சங்கத் தலைவர் உட்பட பல்வேறு பொறுப்புகளில் இருந்தவரும், மூத்த திமுக நிர்வாகியுமான எம்.பி.தோப்புச்சாமி உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்டதை கேள்விப்பட்ட தமிழச்சி தங்கப்பாண்டியன், மாவட்ட கழக செயலாளர் ஐ.பி.செந்தில்குமார் அவர்களுடன் வடக்குத் தெருவில் உள்ள அவர்களின் இல்லத்திற்கு நேரில் சென்று உடல்நலம் குறித்து விசாரித்ததோடு, அவருக்கு சால்வை அணிவித்து வாழ்த்து பெற்றார். உங்களைப் போன்ற மூத்த கட்சி நிர்வாகிகள் கட்சியில் கொள்கைபிடிப்புடன் வளர்த்த காரணத்தினால் இன்று நம் கட்சி (திமுக) ஆலமரம்போல் வளர்ந்துள்ளது என்றார்.

அதன் பின்னர் மாவட்ட கழக செயலாளர் ஐ.பி.செந்தில்குமார் நிதி உதவி வழங்கினார். அதனைத் தொடர்ந்து பாரதி நகரில் குடியிருக்கும் தச்சு வேலை செய்யும் கூலித்தொழிலாளியும், மூத்த கட்சி தொண்டருமான ராஜீ ஆசாரி அவர்கள் இல்லத்திற்கு நேரில் சென்று அவருக்கு சால்வை அணிவித்து வாழ்த்துப் பெற்ற தமிழச்சி தங்கபாண்டியன் எங்களின் மனதில் நீங்கா இடம் பிடித்த தலைவர் மறைந்த முன்னாள் முதல்வர் உலகம் போற்றும் முத்தமிழ் அறிஞர் கலைஞர், ஒவ்வொரு முறையும் உடன்பிறப்பே என்று அழைக்கும் உங்களைப் போன்ற கட்சி தொண்டர்களால்தான், நமது இயக்கம் பலன் பெற்றிருக்கிறது என்றார்.

திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக துணைச் செயலாளர் பிலால்உசேன், பேரூராட்சி மன்ற தலைவர் பிரதீபா கனகராஜா, துணைத்தலைவர் ஆனந்தி பாரதிராஜா, முன்னாள் செயலாளர் மோகன்ராஜ், நகர இளைஞரணி செயலாளர் வினோத் ஒச்சப்பன் மற்றும் முன்னாள் பேரூர் கழக துணைச் செயலாளர் எம்.ஆர்.ஜெயகிருஷ்ணன், முன்னாள் பொருளாளர் எஸ்.ஆர்.முருகன் உட்பட திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



■ தென்காசி மாவட்டத்தில் சுற்றுலாத் துறையின் சார்பில் அருவி பகுதி மேம்பாடு திட்டத்தின் கீழ் ரூ.11 கோடி மதிப்பீட்டில் மெயின் அருவியில் பெண்களுக்கான உடை மாற்றும் அறையினை சீரமைப்பது குறித்தும், பழைய குற்றால அருவி பகுதியில் மழையினால் சேதம் அடைந்த சாலைகளை சீரமைப்பது குறித்தும், ஐந்தருவி மற்றும் புலி அருவி ஆகிய அருவிபகுதியில் நடைபெறும் சுற்றுலா வளர்ச்சி திட்டப் பணிகளை பார்வையிட்டு பணிகளை விரைந்து முடிக்க அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர்.இ.ஆ.ப. அறிவுறுத்தினர். இந்த ஆய்வில், உதவி வன பாதுகாவலர் நெல்லைநாயகம், வன அலுவலர் செல்லத்துரை, சுற்றுலா அலுவலர் ந. நித்திய கல்யாணி, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக உதவி பொறியாளர் விஜில், குற்றாலம் பேரூராட்சி செயல் அலுவலர் குமார் பாண்டியன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# தென்காசி திருத்தலத்தில் சாம்பல் புதன் வழிபாடு: 40 நாட்கள் தவக்காலம் தொடக்கம்





தென்காசி பிப். 19-

ஈஸ்டர் பெருவிழாவிற்கு ஆயத்தமாகும் வகையில், கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் கடைபிடிக்கும் 40 நாட்கள் தவக்காலம் நேற்று தொடங்கியது. இதன் தொடக்க நிகழ்வான சாம்பல் புதன் (Ash Wednesday) தென்காசி தூய மிக்கேல் அதிதூதர் திருத்தலத்தில் மிகச் சிறப்பாக அனுசரிக்கப்பட்டது.

வழிபாட்டின் சிறப்பம்சங்கள்:

திருநீறு பூசுதல்: கடந்த ஆண்டு குருத்தோலை ஞாயிறன்று வழங்கப்பட்ட குருத்தோலைகள் எரிக்கப்பட்டு சாம்பலாக்கப்பட்டன. அந்தச் சாம்பலை இறைமக்களின் நெற்றியில் பூசி, "மண்ணிலிருந்து வந்தாய், மண்ணுக்கே திரும்புவாய்" என்ற வாசகத்துடன் தவக்காலத்தை திருத்தல அதிபர் ஜேம்ஸ் அடிகளார் தொடங்கி வைத்தார்.

சிறப்புத் திருப்பலி: அதிகாலையில் நடைபெற்ற சிறப்புத் திருப்பலியில் அமலவை அருட்சகோதரிகள், அருட்சகோதரர்கள் மற்றும் தென்காசி, செங்கோல் நகர், சுந்தரபாண்டியபுரம் உள்ளிட்ட சுற்றுவட்டார கிராம மக்கள் திரளாகக் கலந்துகொண்டனர்.

ஆன்மீகப் பயணம்: தவக்காலத்தையொட்டி, ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக்கிழமைகளில் பல்வேறு திருத்தலங்களுக்குப் பக்தர்கள் நடைபயணமாகச் செல்லத் திட்டமிட்டுள்ளனர்.



■ மதுரை மாவட்டம் கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியம், மணப்பச்சேரி ஊராட்சி எம்.வெள்ளாளபட்டி நடுநிலைப் பள்ளியில் கழிப்பறை உள்ளிட்ட அடிப்படை வசதிகள் மற்றும் மாணவர்களுக்கு வழங்கப்படும் மதிய உணவின் தரம் குறித்து, மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே. பிரவீன்குமார் ஆய்வு மேற்கொண்டார்.



# அரசு விழாவில் விளையாட்டு உபகரணங்கள் அடங்கிய தொகுப்புகள் : அமைச்சர் பி.மூர்த்தி வழங்கினார்

மேலூர், பிப்.19-

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை சார்பில் டாக்டர். கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டத்தினை மேலும் விரிவுபடுத்தி அனைத்து மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராடசி ஆகிய நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் அடங்கிய தொகுப்பு வழங்கும் திட்டத்தை புதுக்கோட்டை மாவட்டத்திலிருந்து காணொலி காட்சி மூலம் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்கள். அதனை தொடர்ந்து மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், மூவேந்தர் பண்பாட்டு கழக வளாகத்தில் நடைபெற்ற அரசு விழாவில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி விளையாட்டு உபகரணங்கள் அடங்கிய தொகுப்புகளை வழங்கி தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கீழ் செயல்படும் விடுதியில் தங்கி பயிலும் மாணவமாணவிகளுக்கு ரூபாய்.5 லட்சத்திற்கான காப்பீட்டு அட்டையினை வழங்கி , டாக்டர். கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் கொண்டு செல்லும் வாகனத்தை கொடியசைத்து துவக்கி வைத்தார். மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே. பிரவீன்குமார் உடன் உள்ளார்.

# “விதியை தீர்மானிப்பது நீங்களே!” நெல்லை மாணவர்களுக்கு ஐபிஎஸ் அதிகாரி அந்தோணி தேவகுமார் உத்வேக உரை




நெல்லை, பிப்.19-

நெல்லை மாவட்டம் நாங்குநேரி அருகே உள்ள பரப்பாடி தனியார் பள்ளி ஆண்டு விழாவில், உத்தரப் பிரதேச மாநிலத்தின் உயர்மட்டக் காவல் அதிகாரியும், நெல்லை திசையன்விளையைச் சேர்ந்தவருமான ஐபிஎஸ் அதிகாரி அந்தோணி தேவகுமார் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்.

மாணவர்கள் மத்தியில் அவர் ஆற்றிய உரையின் முக்கிய சிறப்பம்சங்கள் :

1. உங்கள் விதியை நீங்களே படைக்கலாம். ஒருவருடைய விதியைத் தீர்மானிப்பது அவரே தவிர வேறு எவருமில்லை. விடாமுயற்சியும், சோர்வில்லாத உழைப்பும் இருந்தால் இடையூறாக வரும் விதியைக்கூட மாற்றும் ஆற்றல் உங்களுக்குக் கிடைக்கும்.

2. திறமையைக் கண்டறிதலே வெற்றியின் ரகசியம். ஒவ்வொரு மாணவரிடமும் ஒரு தனித்திறமை ஒளிந்திருக்கிறது. அதை அடையாளம் காண்பதே உங்கள் முதல் கடமை. உங்களுக்குப் பிடித்த, திறமை வாய்ந்த துறையைத் தேர்ந்தெடுத்துப் பணியாற்றினால் வெற்றி நிச்சயம்.

3. கல்வியின் உண்மையான நோக்கம் கல்வி என்பது வெறும் வேலைவாய்ப்புக்கான கருவி மட்டுமல்ல. வாழ்க்கை விழுமியங்களைக் கற்றுக்கொள்வது, ஒரு சிறந்த குடிமகனாக வாழ்வது என அனைத்தையும் கற்றுத் தருவதுதான் உண்மையான கல்வி.

4. சம உரிமையும் சமூக அக்கறையும் "சம உரிமை" என்பது இந்திய ஜனநாயகத்தின் அடிப்படை. அரசுத் திட்டங்கள் முழுமையாக மக்களைச் சென்றடையாததற்கு ஊழலும் லஞ்சமுமே காரணம். எதிர்காலத் தூண்களான மாணவர்கள் இதனை மாற்ற முயல வேண்டும்.

*உயர்ந்த எண்ணமே உயர்வு தரும்:* "வெள்ளத்தனைய மலர்நீட்டம் மாந்தர்தம் உள்ளத்தனையது உயர்வு" என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க, உங்கள் எண்ணங்கள் எவ்வளவு உயர்ந்து இருக்கிறதோ, அவ்வளவு உயரத்திற்கு உங்கள் வாழ்வும் உயரும்.

*கனவு காணுங்கள்:* எண்ணங்களே குறிக்கோள்களாக மாற வேண்டும்.

*மீள்பார்வை:* உங்கள் பயணத்தில் நீங்கள் சரியான திசையில் செல்கிறீர்களா என்பதை அவ்வப்போது சுயபரிசோதனை செய்துகொள்ளுங்கள்.

*மன உறுதி* : தளராத மன உறுதியுடன் செயல்பட்டால் வெற்றி உங்கள் காலடியில்என பேசினார்.

# வணிகர்களை அலைக்கழிக்கும் கோவை மாநகராட்சி அதிகாரிகள்: உரிமம் புதுப்பிப்பதில் தொடரும் குளறுபடிகள்




கோவை பிப். 19-

கோவை மாநகராட்சியில் வணிக உரிமம் புதுப்பிப்பதில் புதிய நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டும், அதிகாரிகள் தங்களை அலைக்கழிப்பதாக வணிகர் சங்க உறுப்பினர்கள் வேதனை தெரிவித்துள்ளனர். கடந்த காலங்களில் வணிக உரிமம் பெற சுகாதார ஆய்வாளர்களின் நேரடி அனுமதி தேவைப்பட்டது. இதில் முறைகேடுகள் நடப்பதாகப் புகார்கள் எழுந்ததையடுத்து, மாநகராட்சி ஆணையர் சிவகுரு பிரபாகரன், வணிகர்கள் நேரடியாக ஆன்லைன் மூலமாகவோ அல்லது மாநகராட்சி கருவூலங்களிலோ கட்டணம் செலுத்தி உரிமம் பெறும் முறையை அறிமுகப்படுத்தினார்.

தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவை கோவை மாநகர மாவட்ட தலைவர் லிங்கம் செய்தியாளர்களிடம் கூறிய புகார்கள்:கருவூலங்களுக்குச் சென்றால் 'சர்வர் பிரச்சனை' என்று கூறி அதிகாரிகள் திருப்பி அனுப்புகின்றனர். அதிகாரிகளின் மெத்தனப் போக்கு: நேரடியாகப் பணம் செலுத்த வரும் வணிகர்களை, மீண்டும் வார்டு சுகாதார ஆய்வாளர்களிடமே செல்லுமாறு அதிகாரிகள் அலைக்கழிக்கின்றனர்.

நிர்வாக அவமதிப்பு: ஆணையர் மற்றும் மேயர் ரங்கநாயகி அவர்களின் உத்தரவுகளை வார்டு அதிகாரிகள் முறையாகப் பின்பற்றுவதில்லை. மாநகராட்சி ஆணையர் உடனடியாகத் தலையிட்டு, எந்தவித நிர்பந்தமும் இன்றி கருவூலங்கள் மற்றும் இசேவை மையங்களில் கட்டணம் செலுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். விதிகளை மீறி செயல்படும் மற்றும் வணிகர்களை அலைக்கழிக்கும் அதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்தச் சந்திப்பின் போது மாவட்டப் பொருளாளர் மெடிக்கல் விஸ்வநாதன், மாநில இணைச் செயலாளர் ஜான்சன் மற்றும் இளைஞர் அணி தலைவர் வில்சன் ஆகியோர் உடனிருந்தனர்.




# 2026ல் மீண்டும் ஸ்டாலின் ஆட்சி தென்மண்டல மாநாடு வெற்றியை உறுதி செய்யும் பி.மூர்த்தி உறுதி

மதுரை, பிப்.19-

மதுரையில் வரும் பிப்ரவரி 21 ஆம் தேதி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் தென்மண்டல அளவிலான வாக்குச்சாவடி முகவர்கள் (PLA2, PLC, PLD) பயிற்சி மாநாடு நடைபெறவுள்ளது. திண்டுக்கல் முதல் கன்னியாகுமரி வரையிலான 20 மாவட்டங்களைச் சேர்ந்த முகவர்கள் இதில் பங்கேற்க உள்ளனர். இந்த மாநாட்டிற்கான முன்னேற்பாடுகள் மற்றும் உறுப்பினர்கள் பங்கேற்பு குறித்த ஆலோசனைக் கூட்டம், மதுரை வடக்கு மாவட்டம் மேற்கு சட்டமன்றத் தொகுதி திமுக சார்பில் பரவையில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு மாவட்ட அவைத் தலைவர் எம்.ஆர்.எம். பாலசுப்பிரமணியன் தலைமை வகித்தார். தலைமை செயற்குழு உறுப்பினர்கள் தனச்செல்வம், வழக்கறிஞர் பாலாஜி, பொதுக்குழு மனோகரன், ஒன்றிய செயலாளர்கள் ஆர்.கே. ஜெயராமன், திருக்குமரன், சிறைச்செல்வன் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர். பரவை பேரூர் செயலாளர் ராசாமணி வரவேற்றார்.

அமைச்சர் பி.மூர்த்தி பேசியதாவது : 50 ஆண்டுகளாக நிலுவையில் இருந்த பட்டா வழங்கும் பணிகள் தற்போது விரைவுபடுத்தப்பட்டுள்ளன. கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டத்தின் மூலம் 1 கோடியே 31 லட்சம் பெண்கள் பயனடைந்து வருகின்றனர்.இதற்கு அச்சாரமாக மதுரை மாவட்டத்தின் 10 தொகுதிகளிலும் திமுக கூட்டணி வெல்லும்; அதில் மேற்கு தொகுதி முதல் வெற்றியைப் பதிவு செய்யும் என தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் பகுதி செயலாளர்கள் சுதன், காவேரி, சசி தேவா, பொதுக்குழு முருகானந்தம், மாவட்ட பிரதிநிதி என்.எஸ்.மணி, கருணாநிதி, கவுன்சிலர் துரை சரவணன், இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் அன்புச்செல்வன், ஐயப்பன் உள்ளிட்ட திரளான திமுக நிர்வாகிகள் மற்றும் திமுகவினர் பங்கேற்றனர்.



■ தேசிய முற்போக்கு திராவிட கழகம் தலைமை கழக அலுவலகத்தில் 2026 சட்ட மன்ற தேர்தலில் கழகத்தின் சார்பில் போட்டியிட விரும்புகிறவர்கள் விருப்ப மனு அளித்து வருகிறார்கள். அந்த வகையில் திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் சட்ட மன்ற தொகுதிக்கு கழகத்தின் சார்பில் போட்டியிட ஒட்டன்சத்திரம் நகர கழக செயலாளர் (ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர்) சரவணன், தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் அவர்களிடம் விருப்ப மனு வழங்கினார். இந்நிகழ்வில் தேமுதிக கழக பொருளாளர் தளபதி எல்.கே.சுதீஸ் உடனிருந்தார்.












SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000